தினமலர்
உண்மையின் உரைகல்

# 'நாங்கள் துணையாக இருக்கிறோம்'

**சென்னை, ஆக. 19–**

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் 'நாங்கள் துணையாக இருக்கிறோம்' என்ற புதிய விளம்பர பிரசாரத்தை அதன் விளம்பர ஏஜென்சியான டேலன்டட், கோரல் மீடியா ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கியுள்ளது.

இது குறித்து அந்நிறுவனத்தின் பிராண்டு மற்றும் டிஜிட்டல் தலைவர் கோதா கார்த்திக் கூறுகையில், "கடந்த 20 ஆண்டுகளாக தொடர் செயல்பாடுகள் வாயிலாக மக்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிறோம்.

ஒவ்வொரு 8 வினாடிகளுக்கு ஒரு கிளைம் செட்டில்மென்ட் செய்யப்படுகிறது. அந்த வகையில் இதுவரை 71,100 கோடி ரூபாய் மதிப்பில் 1.60 கோடி கிளைம்களுக்கு செட்டில்மென்ட் வழங்கப்பட்டுள்ளது. லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து ஆதரவாக இருந்து வருகிறோம்.

நாங்கள் துணையாக இருக்கிறோம் என்ற விளம்பர பதாகையில் இடம்பெற்றுள்ள பிரசார வாசகம், ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்பதை நினைவுபடுத்தும்," என்றார்.